**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.226/2024 – PW- 1**

| | |
|---|---|
| Name | திரு. சிவகுமார் |
| Husband/Father Name | பரசுராமன் |
| Village /Area | |
| Taluk | |
| Occupation | |
| Age | |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 07.08.2025.

**(எதிரிகள் ஆஜர்)**

**சாட்சி மீண்டும் வரவழைக்கபட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் சென்ற முறை அளித்த சாட்சியத்தில் இந்நீதிமன்றத்தில் இருந்து பெற்ற சென்ற ரூ.17,610/-யை அரசாங்கத்தில் செலுத்தியது தொடர்பாக Remittance Challan வாங்கி தாக்கல் செய்ய வேண்டி அவகாசம் வாங்கி சென்றிருந்தேன். என்னுடைய மேல் அதிகாரி எப்படியாவது குறைபாடு உள்ள தொகையை முழுமையாக செலுத்த வேண்டும் என்று உத்தரவு விட்டதன் அடிப்படையில் நான் அதனை கடன் வாங்கி செலுத்தி விட்டு பிறகு நீதிமன்றத்தில் இருந்து பெற்று சென்ற பணத்தை கடன் தாரரிடம் செலுத்திவிட்டேன். குறைபாடு உள்ள தொகையை வங்கியில் செலுத்தியதற்கான நகலை ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் அது அதசா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அசல் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நகலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது)

**எதிரிகள் 1. 2, 4 தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவம் இரவு நேரம் என்பதால் சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களை நான் பார்க்கவில்லை. சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் ஆஜர் எதிரிகளை நான் பார்க்கவில்லை. காவல் நிலையத்தில் தட்டச்சு செய்யப்பட்ட ஆவணத்தில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். புகாரில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் அது குறித்து நியாபகம் இல்லை. மேற்கொண்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

**<u>எதிரிகள் 3. 5 மற்றும் 6 தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சம்பவம் இரவு நேரம் என்பதால் சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களை நான் பார்க்கவில்லை. சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் ஆஜர் எதிரிகளை நான் பார்க்கவில்லை. காவல் நிலையத்தில் தட்டச்சு செய்யப்பட்ட ஆவணத்தில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். புகாரில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் அது குறித்து நியாபகம் இல்லை. மேற்கொண்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

**(ஒம்./-) திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**